FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364105

1. District : ஈரோடு PS: ஊ.மு.கே.பிரிவு, காவல்நிலையம் ஈ-ரோடு Year: 2026 FIR No.: 07/AC/2026 Date: 10.09.2026
மாவட்டம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, Sections பிரிவுகள்: 7(a), 7(A) and
(ii) Act சட்டம்: 1988 as amended by the Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : நாள் முதல் Date to : நாள் வரை ஜூன் 2026 மாலை சுமார் 5 மணி முதல்
குற்ற நிகழ்வு நாள்
Time Period : Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
நேர அளவு

(b) Information Received at PS. Date : 10.09.2026 Time : நேரம் 06.00
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

(c) General Diary Reference : Entry No(s) GD-VOL-II 10.09.2026 Time : நேரம் 06.00
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கோபி சார்பதிவாளர் அலுவலகம் சுமார் 25.கி.மீ. மேற்கு
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. காந்திகேயன் (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் K. ராமசாமி கவுண்டர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(c) Date / Year of Birth : 1978 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
நாள் / பிறந்த ஆண்டு

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் (g) Address : முகவரி
தொழில்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. சங்கர், சார்பதிவாளர்/உதவியாளர், கவுந்தபாடி சார்பதிவாளர் அலுவலகம், ஈ-ரோடு மாவட்டம்.
2. திரு. வெற்றி, அலுவலக எழுத்தர், கவுந்தபாடி, ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R.Z 10.9.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

10.9.2026

15. Date & Time of despatch to the court: 10.09.2026 08.00
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.ரோகா.....
Rank: நிலை தலைமைக் காவலர்,
21.4-G. பாரிய,
சிறை.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 07/AC/2026 u/s 7(a), 7 (A) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M.ரேகா ஆகிய நான் 10.09.2026 தேதி காலை 06.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது R.கார்த்திகேயன், த/பெ K.ராமசாமி கவுண்டர், கதவு எண் 115, மரம்புளியன்தோட்டம், ராயபாளையம், நசியனூர், ஈரோடு மாவட்டம். 638107 என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் R.கார்த்திகேயன், த/பெ K.ராமசாமி கவுண்டர், கதவு எண் 115, மரம்புளியன்தோட்டம், ராயபாளையம், நசியனூர், ஈரோடு மாவட்டம். 638107. பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சலங்கபாளையம் கிராமம், புதிய சர்வே எண் 884/1ல் 3 ½ ஏக்கர் நிலமானது கவுந்தப்பாடி சார்பதிவக ஆவண எண் 765/2006 கிரைய ஆவணத்தின் படியும் மற்றும் கடந்த 22.09.2022 நாளது ஆவண எண் 4090/2022 பாகபாத்திய பத்திரத்தின் படியும் எனக்கு பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி பூமியை எனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் கடன் தேவைகளுக்காகவும் விற்பனை செய்ய முடிவு செய்தேன். இதனை புரோக்கர்கள் மூலம் தெரிந்துகொண்டு காஞ்சிகோயிலை சேர்ந்த மகேந்திரன் மற்றும் செங்கோடம்பாளையத்தை சேர்ந்த சேகர் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதத்தில் எனது நிலத்தை விலைக்கு கேட்டார்கள். அவர்களிடம் ரூ.42 லட்சத்திற்கு விலை பேசி முடித்தேன். மேற்படி சேகர் மற்றும் மகேந்திரன் ஆகியோர் என்னிடம் ஆவணத்தின் நகலை பெற்று அவர்களுக்கு தெரிந்த ஆவண எழுத்தர் வெற்றி என்பவரிடம் கொடுத்து கிரைய பத்திரத்திற்கான வரைவு ஆவணம் தயார் செய்தார்கள். நிலத்தை வாங்கக்கூடிய தரப்பினர் சொன்னதின் பேரில் நான்ஆவண எழுத்தர் வெற்றி அவர்களை சந்தித்தேன். அவர் மேற்படி நிலம் சம்மந்தமாக நிபந்தனைக்குட்பட்ட பட்டா பூமியா என பூமியின் தண்மை குறித்து சான்று தேவைப்படுவதாகவும், அதனை பவானி தாசில்தார் அலுவலகத்தில் வாங்கி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், கவுந்தப்பாடி சார்பதிவாளரை பார்க்குமாறும் சொன்னார். நான் கவுந்தப்பாடி சார்பதிவாளர் திரு.சங்கர் அவர்களை அவரது அலுவலகத்திற்கு போய் பார்த்து விபரத்தை சொன்னபோது, அவர் எனது நிலத்தை நேரடியாக பார்க்க வேண்டும் என்று சொன்னார். மேலும் அவர் பவானி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு கடிதத்தை என் மூலமாகவே கொடுத்துவிட்டு அதை பாலோ செய்து பதில் கடிதம் வாங்கிவருமாறு சொன்னார். அவர் சொன்னபடி நான் அந்த கடிதத்தை பவானி வட்டாட்சியர் அலுவலகத்தில்

கொடுத்துவிட்டேன். பின்னிட்டு வட்டாட்சியர் குமரேசன் அவர்களை நேரில் பார்த்து விபரம் சொல்லிட்டேன். பின்னர் ஜூன் மாத இறுதியில் மேற்படி எனது நிலம் உள்ள புலமானது தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் இல்லை என கடிதம் பெற்று கவுந்தப்பாடி சார்பதிவாளரிடம் கொடுத்தேன். அதன்பின்னர் ஜூலை மாதம் முதல் வாரத்தில் ஒருநாள் SRO சங்கர் எனது நிலத்தை நேரடியாக வந்து பார்த்தார். பார்த்துவிட்டு, சரி ஓ.கே பதிவு பண்ணிக்கலாம், கொஞ்சம் ரிஸ்க் இருக்கிறது, சுமார் 10 லட்சம் ரூபாய் வரைக்கும் செலவாகும், DR க்கெல்லாம் கொடுக்கவேண்டும், உங்கள் சூழ்நிலைக்காக கொஞ்சம் குறைச்சுக்கலாம், ஒரு ஆறு லட்சம் ரூபாய் கொடுத்துருங்க என்று சொன்னார். நானே குடும்ப கஷ்டத்தில் தான் நிலத்தை விற்கிறேன், இவ்வளவு பணம் என்னால் கொடுக்கமுடியாது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் இல்லை அப்படி எல்லாம் குறைக்க முடியாது, இதுக்கு கம்மியாக யாரும் செய்யமாட்டார்கள், நான்தான் இருக்கறதுலயே கம்மியா பன்றேன், எனக்கு ரிஸ்க் அதிகமாக இருக்கிறது, உங்களுக்கு வேண்டாம்னா விட்டுருங்க, நான் உங்களுக்கு எந்த ஹெல்ப்பும் பண்ண முடியாது என்றார். நான் வேறு வழியின்றி ஒத்துக்கொண்டேன். பின்னர் 27.08.2026ம் தேதி கிரையம் முடிவானது. நாங்கள் கிரையத்திற்கு சென்றபோது சார்பதிவாளர் என்னை அழைத்து மீண்டும் உங்கள் பூமி சம்மந்தமாக பவானி தாசில்தாரிடமிருந்து ஒரு ஆட்சேபனை கடிதம் வந்துள்ளது. நீங்கள் ஆர்.டி.ஓ விடம் NOC வாங்கி வரவேண்டும் என்றும், தற்போது கிரையம் செய்ய முடியாது என்றும் சொல்லிவிட்டார். மேலும், நீங்கள் அலைய வேண்டாம், எனக்கு ரெவின்யூவில் ஆள் இருக்கிறது, நானே பார்த்துக்கொள்கிறேன், கொஞ்சம் கூட செலவாகும், என்ன செய்யலாம் என்று கேட்டார். நான் யோசித்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். பின்னர் 29.08.2026ம் தேதி மதியம் கிருஷ்ணன் என்ற நில புரோக்கர் சொன்னதின் பேரில் நான் ஆவண எழுத்தர் வெற்றியிடம் போனில் பேசினேன். அவர் என்னிடம் ஆர்.டி.ஓ விடம் NOC வாங்கி வரவேண்டும் என்று தாசில்தார் லெட்டர் கொடுத்துவிட்டதால் ஏற்கனவே சார்பதிவாளர் பேசிய தொகையை விட கூடுதலாக ஒரு லட்சம் சேர்த்து ஏழு லட்சம் ரூபாய் வேண்டும் என்றும், ஆனால் கிரையம் கண்டிப்பாக முடித்துக்கொள்ளலாம், அதைப்பற்றி கவலைப்படவேண்டாம், நானே பார்த்துக்கொள்கிறேன் என்றும் சொன்னார். நான் அமௌன்ட் ஏதாவது குறைத்துக்கொள்ள முடியுமா என்று சார்பதிவாளரிடம் கேட்டுப்பார்க்க சொன்னேன். அவர் நான் பேசிபார்க்கிறேன் என்று சொன்னார். நானும் வந்து சார்பதிவாளரை பார்க்கிறேன் என்று சொன்னேன். அவர் உடனே கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். பின்னர் அவரே என்னை அழைத்து திங்கள் கிழமை சார்பதிவாளர் வரச்சொன்னதாக சொன்னார். அதன்படி நான் 31.08.2026ம் தேதி திங்கள்கிழமை மாலை வெற்றியின் அலுவலகத்திற்கு சென்று வெற்றியை பார்த்தேன். அவர் தான் சார்பதிவாளரிடம் பேசிவிட்டதாகவும், நீங்களே நேரடியாக சென்று சார்பதிவாளரை பாருங்கள் என்று சொன்னார். எனவே மாலை சுமார் 6.00 மணியளவில்

சார்பதிவாளர் சங்கர் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசினேன். வெற்றி மொத்தமாக ஏழு லட்சம் ரூபாய் கேட்டதாக சொல்லி கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு நான் கேட்டேன். அதற்கு அவர் எனக்கு பணத்து மேல் ஆசை இல்லைன்னு சொல்லல, கொஞ்சம் இருக்கு, ரிஸ்க்கும் இருக்கு, அமௌளன்ட் அன்னைக்கு சொன்னதுதான், ஆறு லட்சம்தான், நான் எப்பவுமே ஏத்தவும் மாட்டேன், இறங்கவும் மாட்டேன், மத்தபடி ஒருலட்சம் மறுபடி பாத்துக்கலாம், DRO ஆபீசிலயும் கேட்கவேண்டியிருக்கு, நான் பேசிவிட்டு புதன்கிழமை சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார். பின்னர் நான் மீண்டும் புதன்கிழமை மாலையில் சார்பதிவகத்திற்கு சென்று சார்பதிவாளர் சங்கரை பார்த்தபோது அவர் DRO ஆபீசிலயும் கேட்கவேண்டியிருக்கு, வெற்றி மருத்துவமனையில் இருக்கிறான் என்று சொன்னார். எதற்கும் வெற்றி மருத்துவமனையிலிருந்து வந்தபிற்கு பேசி முடிவு செய்துகொள்வோம் என்று சொன்னார். பின்னர் நான் வெற்றிக்கு போன் செய்து பேசியபோது, அவர் மருத்துமனையில் இருப்பதாகவும், திங்கள்கிழமைக்கு மேல் பேசுங்கள் என்று மற்றொரு நபர்தான் பேசினார். அதன்பின்னர் நான் 08.09.2026ம் தேதி மதியம் வெற்றியிடம் போனில் பேசியபோது, அவர் தான் சார்பதிவாளரிடம் மிகவும் வலியுறுத்தி பேசிவிட்டதாகவும், ஆனால் அமௌளன்ட் ஏழு லட்சம் ரூபாய்தான் என்றும், அதற்கு கீழ் குறைக்க வாய்ப்பில்லை என்று அவர் சொல்லிவிட்டதாகவும், ஆனால் இந்த வாரத்திலேயே கிரையம் கண்டிப்பாக முடித்துக்கொள்ளலாம், நீங்கள் அமௌளன்டை ரெடி பண்ணிருங்க என்று சொன்னார். அதன்பின்னர் நேற்று 09.09.2026ம் தேதி மாலை சுமார் 5.15 மணியளவில் நான் வெற்றியிடம் போனில் கூப்பிட்டு எப்போது கிரையம் வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டபோது, நாளைக்கு மதியம் வைத்துக்கொள்ளலாம் என்றும், பணத்தை நீங்கள் என்கிட்டயே கொடுத்துவிடுங்கள், SRO விடம் நான் பேசிவிட்டேன், எனக்கு உண்டான தொகை நான் எடுத்துக்கொண்டு SROவிற்கு சேரவேண்டியதை நானே அவரிடம் கொடுத்துவிடுகிறேன் என்றும் சொன்னார். நான் சரி மதியம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் யோசித்து பார்த்ததில் சார்பதிவாளருக்கும், ஆவண எழுத்தர் வெற்றிக்கும் லஞ்சமாக ஏழு லட்சம் ரூபாய் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது சொத்தை சேகர் மற்றும் மகேந்திரன் ஆகியோருக்கு கிரையம் செய்வது சம்மந்தமான பத்திரம் பதிவு செய்ய என்னிடம் லஞ்சமாக ரூ.7,00,000/- கேட்கும் கவுந்தப்பாடி சார்பதிவாளர் சங்கர் மற்றும் ஆவண எழுத்தர் வெற்றி ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு (Sd xxxxxxx) 10.9.2026.

Sir, Received the above said computer typed complaint on 10.09.2026 at 06.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the

DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.07/AC/2026 u/s 7(a), 7(A) and 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018 today on 10.09.2026 at 07.00 hrs. Sd/- (xxxxxxxx) 10.09.2026 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.R.Karthikeyan S/o Ramasamy Gounder, D.No.115, Marampuliyanthottam, Rayarpalayam, Nasiyanoor, Erode District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

10.9.2026

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.